முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை: திருமதி.A.P. லதா, பி.எஸ்.ஸி., பி.எல்.,
முதன்மை தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்

வெள்ளிக் கிழமை, 24 ம் நாள், ஏப்ரல் மாதம் 2026 ம் வருடம்.

தொழிற்தாவா எண்.59/2025

(CNR No.TNCB-04-000154-2025)

பொதுச் செயலாளர்,
கோவை அரசு போக்குவரத்து
ஊழியர் சங்கம் (சி.ஐ.டி.யு),
109, பார்க் வீதி, காட்டுர்,
கோயம்புத்தூர் - 641 009. ..... மனுதாரர்

~ எதிராக ~

நிர்வாகம்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை லிமிடெட்),
37 மேட்டுப்பாளையம் சாலை,
கோயமுத்தூர் - 641 043. ..... எதிர்மனுதாரர்

இந்த வழக்கு கடந்த 20.04.2026 ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.B.ஜோதிகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.K.T.கன்னிகாசங்கரேஸ்வரி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை

செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் :-

## முதல்நிலை தீர்வம்

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(K)ன் கீழ் கோவை தொழிலாளர் அலுவலர் முன்பாக ஒரு மனு தாக்கல் செய்து, மனுதாரர் திரு.C.ஆனந்தகுமார், என்ற ஓட்டுநருக்கு (ப.எண்.C20029), ஆண்டு ஊதிய உயர்வு 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 09.12.2014 முதல் 27.12.2014 வரையுள்ள 19 நாட்களை, மனுதாரரது விடுப்பு நாட்களாக கருதி நிர்வாகம் பிறப்பித்த 29.08.2015 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியிருந்த மனுவானது தொழிற்தாவா விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சமரசம் ஏற்படவில்லை என்பதால் 20.08.2024 தேதியில் சமரச அதிகாரி தனது சமரச முறிவு அறிக்கையை மாநில அரசுக்கு சமர்பித்தார். அதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு கீழ்கண்ட எழுவினாவிற்கு பதில் அளிக்க இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

G.O. (D) No.76 Labour and Employment (D-1)
Department, dated 18.02.2025.

எழுவினா

மனுதாரர் திரு.C.ஆனந்தகுமார், என்ற ஓட்டுநருக்கு (ப.எண்.C20029), ஆண்டு ஊதிய உயர்வு 2 வருட காலத்திற்கு பின்தொடர்ச்சியுடன் தள்ளி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 09.12.2014 முதல் 27.12.2014 வரையுள்ள 19 நாட்களை, மனுதாரரது விடுப்பு நாட்களாக கருதி நிர்வாகம் பிறப்பித்த 29.08.2015

நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்".

2. <u>மனுவின் சுருக்கம்</u> :

மனுதாரர் சங்கம் போக்குவரத்து ஊழியர்களின் சட்டம் சார்ந்த உரிமைகளுக்காக சட்டம் வகுத்து கொடுத்துள்ள வழிகாட்டுதலின் படி கூட்டு பேர நடவடிக்கையில் ஈடுபட்டு தொழில் அமைத்து ஏற்படுத்திக் கொண்டிருக்கும் முறையாக பதிவு செய்த சங்கமாகும். மனுதாரர் சங்கம் தொழிற்சங்க சட்டப்படி முறையாக பதிவு செய்யப்பட்டது ஆகும். எதிர்மனுதாரரின் நிறுவனம் தமிழக அரசின் போக்குவரத்து துறையின் கீழ் இயங்கி வரும் கார்ப்பரேஷன் ஆகும். தமிழகம் முழுவதம் பல ஆயிரம் பேர் ஓட்டுநர், நடத்துநர் மற்றும் பணிமனை அலுவலக பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மனுதாரரின் சங்க உறுப்பினருக்கு1/ஜி9/5858/தஅபோக/2014 நாள் 12.12.2014 தேதியிட்டு குற்றச்சாட்டு குறிப்பாணையினை எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கியது. அதில் சங்க உறுப்பினர் 08.12.2014 தேதி அன்று TN-38-N-2739 ஓட்டுனராக பணிபுரிந்த போது, இரவு 07.35 மணி அளவில் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உம்மை கண்காணித்த போது ABS என்ற தனியார் பேருந்தின் ஊழியர் ஒருவரிடம் ரூ.20/- கையூட்டாக பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது என்றும், நீர் பெற்ற ரூ.20/-ன் எண்.80 ஜி875193 ஆகும் என்றும், அதை தணிக்கையாளர்கள் உம்மிடம் இருந்து கைப்பற்றி உள்ளார்கள் என்றும், இதுகுறித்து மேற்கொண்டு ஆய்வு செய்த போது மாலை 5.40 மணிக்கு திருப்பூரில் புறப்பட்டு பல்லடத்திற்கு 6.05 க்கு வந்து 6.10 க்கு அங்கிருந்து புறப்பட வேண்டும் என்றும், தனியார் பேருந்தான ABS

பல்லடத்திற்கு மாலை 6.10க்கு வந்து 6.15க்கு புறப்பட வேண்டும் என்றும், தனியார் பேருந்தான ABS பேருந்திற்கு சாதகமாக செயல்படுவதற்காக நீர் ரூ.20/- கையூட்டு பெற்றது தெரிய வந்தது என்றும், இதுகுறித்து நடத்துனரின் முன்னிலையில் உம்மை விசாரித்து பின் குறைபாடுகளின் சுருக்கப்படிவம் பூர்த்தி செய்து உம்மிடம் கையொப்பம் பெறப்பட்டது என புகார் வந்துள்ளது. இதுகுறித்து ஏன்? ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது எனவும், விளக்கத்தை கோரியிருந்தது.

3. அதற்கு மனுதாரர் சங்கத்தின் உறுப்பினர் சி.ஆனந்தகுமார் அவர் மீதான குற்றச்சாட்டு குறிப்பாணைக்கான மறுப்பு மற்றும் உண்மை நிலையின் தனது விளக்கத்தையும், சமாதானத்தையும் 17.12.2014 தேதியிட்டு எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு சமர்ப்பித்திருந்தார். சங்க உறுப்பினர் C.ஆனந்தகுமார், அன்று நடந்த உண்மை நிகழ்வையும், அதற்கான விளக்கத்தையும் சமர்ப்பித்ததை ஏற்காமல் உள்ளக விசாரணையை மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகம் சட்டத்திற்கு புறம்பாகவும், ஒருதலைபட்சமாகவும் மேற்கொண்டது சங்க உறுப்பினரின் முறையான கோரிக்கைகளை நிர்வாக தரப்பில் அளித்துள்ள சாட்சிகள் யாவும் முறையற்ற சாட்சிகளாக இருப்பதையும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவத்தின் போது இருந்ததாக சொல்லப்படும் யாரையும் நிர்வாகம் விசாரணை செய்யாததிலிருந்தும், மேலும் குற்றம் சாட்டப்பட்ட C.ஆனந்தகுமார் தனது வாக்கு மூலத்தின் மூலம் கூடுதல் விளக்கத்தையும், கடந்த 12.06.2015 அன்று நடைபெற்ற உள்ளக விசாரணையிலும் சமர்பித்த போது அதை பெற்றுக்கொண்ட நிர்வாகம் மனுதாரரை குறுக்கு விசாரணை ஏதும் செய்யாமலிருந்து தனது கடமையிலிருந்து தவறியதையும், அது உள்துறை

விசாரணையில் விதிமீறல் என்பதை உள்ளக விசாணை அதிகாரி வேண்டுமென்றே கவனிக்க தவறிவிட்டார்.

4. மேலும், எதிர்மனுதாரர் நிர்வாகம் குற்றம் சாட்டப்பட்ட ஆனந்தகுமார் 21,07.2015 தேதியிட்ட குறிப்பாணையுடன் உள்ளக விசாரணை அதிகாரியின் அறிக்கையை மட்டும் வழங்கியது. மேலும் அதில் விசாரணை அதிகாரியின் அறிக்கையை பரிசீலித்த நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளது என்றும், விசாரணை அதிகாரியின் முடிவை நிர்வாகம் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்கு சங்க உறுப்பினரின் ஆட்சேபணை ஏதுமிருப்பின் அதை பொது மேலாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி சங்க உறுப்பினர் C.ஆனந்தகுமார் அனுப்பிய கடிதத்தின் மூலம் தனது ஆட்சேபனையையும், விளக்கத்தையும் மற்றும் உள்ளக விசாரணை ஒருதலை பட்சமாக நடைபெற்றுள்ளது என்பதை விளக்கியும், மேலும் உள்ளக விசாரணையின் நடவடிக்கை குறிப்புகள் ஏதும் வழங்காமலும், வெறும் முடிவு அறிக்கையை மட்டும் வழங்கி அதன் அடிப்படையிலும், சங்க உறுப்பினர் C.ஆனந்தகுமார் தாக்கல் செய்துள்ள கூடுதல் விளக்கத்தை ஏற்காமலும், விசாரணை முடிவினை ஏற்றது, உள்ளக விசாரணை நியதிக்கு முரணான செயலாகும் என்று விளக்கத்தை அளித்தும், அதை எதிர்மனுதாரர் நிர்வாகம் பெற்றுக்கொண்டு பரிசீலிக்காமல் அந்த விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்று கூறி கடந்த 18.08.2015 ந் தேதியிட்டு உத்தேச தண்டனை அறிவிப்பு வழங்கியது.

5. அதற்கு சங்க உறுப்பினர் ஆனந்தகுமார் தனது சமாதானத்தையும் மற்றும் தமக்கு உள்ளக விசாரணையில் அதிகாரியால் வாய்ப்புகள் வழங்காத காரணத்தையும், மேலும் உள்ளக விசாரணை அறிக்கையை எதிர்மனுதாரர் நிர்வாகம் ஏற்றுக்கொண்டதற்கான காரணத்தை கூறாமல் தனது ஆட்சேபனைகள் என்னனென்ன காரணத்தால் நிராகரிக்கப்பட்டது என கூறாமல், அதற்கான விளக்கத்தையோ அல்லது சமாதானத்தையோ தெரிவிக்க கூறியிருப்பது தவறு என்றும், அச்செயல் சட்டத்திற்கும், இயற்கை நியதிக்கும் எதிரானது என்று கூறி 27.08.2015 தேதியிட்ட கடிதத்தை நிர்வாகத்திற்கு சமர்ப்பித்தார். அதை வேண்டுமென்றே பரிசீலிக்காத நிர்வாகம் சங்க உறுப்பினர் ஆனந்தகுமாருக்கு 29.08.2015 தேதியிட்டு உத்திரவு ஒன்றை வழங்கியது. அதில் மேற்படி உத்தேச தண்டனை அறிவிப்புக்கு சங்க உறுப்பினர் அளித்த சமாதானம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும், தண்டனையாக வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு வருடகாலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து உத்திரவிடப்பட்டிருந்தது. இந்த உத்திரவை எதிர்த்து சங்க உறுப்பினர் ஆனந்தகுமார் 16.10.2015 தேதி மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் மேலாண்மை இயக்குநருக்கு மேல் முறையீடு செய்தார். சங்க உறுப்பினர் C.ஆனந்தகுமார் தண்டனையை ரத்து செய்யும்படி செய்த மேல்முறையீட்டு கடிதத்தை இன்று வரை பரிசீலிக்காமல் கிடப்பில் போட்டுள்ளது. மேலும் எவ்விதபலனும் கிடைக்காததால் மேற்படி உத்திரவினை எதிர்த்து கோவை தொழிலாளர் அலுவலர் முன்பு தொழிற்தகராறு சட்டம் 1947 பிரிவு 2(k)ன் படி மனுதாரர் சங்கத்தால் தாவா எழுப்பபப்பட்டு, அது அதில் எதிர்மனுதாரர் நிர்வாகம் கலந்துகொண்டு தவறான சங்கிதிகளை சொல்லி பதிலுறை ஒன்றை தாக்கல் செய்து நிர்வாகம் சமரச

பேச்சுவார்த்தை முறிவுக்கு வர காரணமாகவும் இருந்து சமரச முறிவறிக்கை வழங்கப்பட்டு அதன் மீது அரசாங்கத்தால் G.0.842 வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக இந்நீதிமன்றத்தின் முன் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்படுகிறது.

6. மேலும் ஊதிய உயர்வை பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைத்து தண்டனை வழங்குவதற்கு உள்ள அதிகாரம் தண்டனை உத்திரவு வழங்கிய அதிகாரிக்கு உள்ளது என்று போக்குவரத்துக் கழக நிலையாணையில் எந்த பிரிவிலும் சொல்லப்படவில்லை. மேலும் பின் தொடர்ச்சியுடன் ஊதிய உயர்வை நிறுத்தி வைப்பது என்பது வேண்டுமென்றே சங்க உறுப்பினர் ஓட்டுனர் ஆனந்தகுமாருக்கு நிர்வாகம் வழங்கியிருக்கும் தண்டனை ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கும் தண்டனையாகும். ஒரு குற்றத்திற்கு இரண்டு விதமான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளது. இது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. உத்தேச தண்டனை அறிவிப்பில் ஒரு தண்டனையை மட்டும் அறிவித்து விட்டு தண்டனை உத்திரவில் கூடுதலாக தண்டனை வழங்கியிருப்பது இயற்கை நீதி, மற்றும் நிலையாணைக்கு புறம்பானது. அதனால் நிர்வாகம் கொடுத்த தண்டனை சட்டப்படி ரத்து செய்ய வேண்டியதாகும். எனவே மனுதாரர் சங்கத்தின் உறுப்பினர் C ஆனந்தகுமார் அவர்களுக்கு வழங்கிய 29.08.20215 ம் தேதியிட்ட தண்டனையான வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருடகாலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கும் உத்திரவினை ரத்து செய்து அதனால் கிடைக்கக்கூடிய பணம் மற்றும் சட்டப்பலன்களை எதிர்மனுதாரர் நிர்வாகம் சங்க உறுப்பினர் ஆனந்தகுமாருக்கு வழங்கிட எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டுமாய் இந்த கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :

மனு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. சங்கஉறுப்பினர் திரு.C.ஆனந்தக்குமார், ப.எண்.C20029 சுங்கம் 1ல் பணிபுரியும் ஓட்டுனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளி வைக்கவும், 09.12.2014 முதல் 27.12.2014 வரையுள்ள 19 நாட்களை அவரது விடுப்பு கணக்கில் நிலுவையில் உள்ள விடுப்பு நாட்களை பொருத்து விடுப்பாக கருதவும் வழங்கியுள்ள உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என இத்தாவாவில் கோரிக்கை எழுப்பியுள்ளது. சங்க உறுப்பினர் கடந்த 31.052024 ல் பணி ஓய்வு பெற்றுள்ளார். மனுதாரர் சங்க உறுப்பினர் திரு.C.ஆனந்தகுமார், C20029, 08.12.2014 ம் தேதியன்று TN-38-N-2739 எண்ணிட்ட பேருந்தில் ஓட்டுனராகவும், திரு.P.பரமேஸ்வரன் 18170 நடத்துனராகவும் பணிபுரிந்து வந்தனர். எதிர்மனுதாரர் நிர்வாக உத்திரவின்பேரில் 08.12.2014 ம் தேதியன்று கோவை மத்திய பேருந்து நிலையத்தில் கழக பேருந்துகளின் இயக்கங்கள் மற்றும் தனியார் பேருந்துகளின் இயக்கங்கள் மற்றும் கழக ஓட்டுனர்கள், நடத்துனர்களின் செயல்பாடுகள் குறித்து கண்காணிக்கும் M.D.SQUAD தணிக்கை பணியில் திருA.வெள்ளிங்கிரிசாமி T.I. (ப.எண்.12014) மற்றும் திருஆறுச்சாமி SR.C.E. (ப.எண்.14277) ஆகியோர் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அது சமயம் சுமார் 19.35 மணிக்கு TN-38-N-2739 எண்ணிட்ட கோவை வழித்தட பேருந்தின் ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார்-C20029 தனியார் துறை ABS சார்ந்த நபரிடம் 80 G 875193 எண்ணிட்ட ரூ.20/- கையூட்டு பெறும்போது M.D.SQUAD தணிக்கையாளர்களால்

நேரடியாக பிடிபட்டுள்ளார். இது குறித்து M.D.SQUAD தணிக்கையாளர்களிடமிருந்து புகார் பெறப்பட்டது.

8. ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் 08.12.2014 அன்று TN-38-N-2739 திருப்பூர்-கோவை வழித் தடத்தில் ஓட்டுனராக IInd ஷிப்டில் பணிபுரிந்ததாகவும், பிற்பகல் 5.40 மணிக்கு திருப்பூரிலிருந்து புறப்பட்டு இரவு 7.35 மணிக்கு கோவை மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்தடைந்ததாகவும், அது சமயம் இரவு 7.35 மணியளவில் தனியார்துறை ABS சார்ந்த நபரிடம் 80 G 875193 எண்ணிட்ட ரூ.20/- கையூட்டு பெறும்போது M.D.SQUAD தணிக்கையாளர்களால் பிடிக்கப்பட்டதாகவும் எனவும், தனது பணியில் இது போன்ற தவறுகள் ஏதும் நடக்காமல் கவனமாக பணிபுரிவதுடன் கழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுவேன் எனவும், இம்முறை மன்னித்து அருளுமாறும் "வாக்குமூலம் அளித்துள்ளார். நடத்துனர் திரு.P.பரமேஸ்வரன் 08.12.2014 அன்று TN-38-N-2739 திருப்பூர்-கோவை வழித் தடத்தில் நடத்துனராக II-nd ஷிப்டில் பணிபுரிந்ததாகவும், பிற்பகல் 5.40 மணிக்கு திருப்பூரிலிருந்து புறப்பட்டு இரவு 7.35 மணிக்கு கோவை மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்தடைந்ததாகவும், அது சமயம் இரவு 7.35 மணியளவில் தனியார்துறை ABS சார்ந்த நபரிடம் 80G875193 எண்ணிட்ட ரூ.20/- ஓட்டுனர் கையூட்டு பெற்றதாக M.D.SQUAD தணிக்கையாளர்கள் தன்னிடம் கூறி விசாரிக்க சொன்னார்கள் எனவும், ஓட்டுனர் தன்னிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு 80G875193 எண்ணிட்ட ரூ.20/-நோட்டை ஓட்டுனர் கொடுத்துவிட்டார் எனவும், ஓட்டுனர் ரூ.20/- கையூட்டு பெற்றுக் கொண்டதற்கும், அவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும்" வாக்குமூலம் அளித்துள்ளார்.

9. 12.12.2014 ம் தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஆகியோர்களது வாக்குமூல அறிக்கையுடன் M.D.SOUAD தணிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட புகாரில் 08.12.2014 ம் தேதி மாலை 5.40 மணிக்கு திருப்பூரில் புறப்பட்டு, பல்லடத்திற்கு மாலை 6.00 மணிக்கு வந்து 6.10 மணிக்கு அங்கிருந்து புறப்பட வேண்டும் எனவும், தனியார் பேருந்தான ABS பல்லடத்திற்கு மாலை 6.10 மணிக்கு வந்து 6.15 மணிக்கு புறப்பட வேண்டும் எனவும், அப்பேருந்துக்கு சாதகமாக செயல்படுவதற்காகவே ஓட்டுனர் ரூ.20/- கையூட்டு பெற்றது தெரியவந்தது எனவும், ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமாரின் இச்செயல் நிலையாணைப் பிரிவு 14(e)க்குட்பட்ட ஒழுங்கீனமாகும் என குறிப்பிட்டு, இக்குற்றச்சாட்டுக்குமூன்று தினங்களுக்குள் உரிய பதிலுரை தாக்கல் செய்யுமாறு எடுத்துரைத்து. 09.12.2014 ம்தேதி முதல் ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் விசாரணை முடிவுறா தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார்

10. 12.12.2014 ம் தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்ட ஓட்டுனர் திரு C.ஆனந்தகுமார் 17.12 2014 ம் தேதியிட்ட கடிதத்தில், திருப்பூரிலிருந்து கோவைக்கு ஆள் இல்லாத லக்கேஜ் பண்டல் அனுப்பியதற்கு சுமை கட்டணம் ரூ.30/-ஐ சம்பந்தப்பட்ட நபரிடம் வசூலிக்க சென்றார் எனவும். அந்நபர் ரூ.20/- நோட்டு 02 அளித்ததும், அவருக்கு ரூ.10/-ஐ திருப்பி தந்துவிட்டு, திரும்பியபோது, அங்கு நின்றிருந்த தணிக்கையாளர்கள், ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் ABS பேருந்து ஊழியரிடம் பெற்ற ரூ.20/-ஐ எடுத்துக் காட்டுமாறும், குறைபாடுகள் சுருக்கத்தில் கையொப்பமிடுமாறும்

தணிக்கையாளர்கள் வற்புறுத்தினர் எனவும், சம்பவ இடத்தில் கூட்டம் கூடவே வேறு வழியின்றி குறைபாடுகள் சுருக்கத்தில் கையொப்பமிட்டதாக ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமாரின் 17.12.2014 ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்த சமாதானம் பரிசீலனையில் உள்ளதாக தெரிவித்து, அவர் மீதான மேல்நடவடிக்கைக்குப் பாதகமில்லாமல் 28.12.2014 ம் தேதி முதல் மீண்டும் பணியில் சேருமாறு 28.12.2014 ம் தேதியிட்ட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

11. ஓட்டுனர் திரு C.ஆனந்தகுமாரின் 17.12.2014 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்த சமாதானம் ஏற்புடையதல்ல என்பதால், உள்ளக விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி 06.02.2015, 29.05.2015 மற்றும் 19.06.2015 ம் தேதிகளில் விசாரணைகள் நடைபெற்றன. இவ்விசாரணைகளில் சட்டம் மற்றும் இயற்கை நியதிகளுக்கு உட்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களும் ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமாருக்கு அளிக்கப்பட்டது. விசாரணை அதிகாரி தனது 17.07.2015 ம் தேதியிட்ட இறுதி அறிக்கையில் "M.D.Squad" தணிக்கையாளர்களால் குற்றம் சாட்டபட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் திருப்பூரிலிருந்து கோவைக்கு கொண்டுவரப்பட்ட ஆள் இல்லாத சுமைக்காக சுமையைபெற வந்தவரிடம் பெறப்பட்ட தொகை என்று குற்றம்சாட்டப்பட்டவர் கூறுவதை ஏற்க இயலாது. ஆள் இல்லாத சுமைக்காக நடத்துனர் அடித்த சுமைச் சிட்டை ஆதாரமாக நிருபிக்கவில்லை. உண்மையில் சமைச்சீட்டு அடித்திருந்தால் இன்வாய்சில் அந்த விபரம் இருக்கும். குற்றம் சாட்டப்பட்டவர் அதை ஆதாரமாக நிருபிக்கவில்லை. மேலும் இந்த சுமை எடுக்க வந்தவரிடம் பணம் வாங்க

தவறியது, பிறகு நடத்துனர் சொல்ல அந்த உரிமையாளரை தொடர்ந்து ஓடிச் சென்று சுமைக் கட்டணம் பெற்றது ஆகிய விபரங்களை 29.05.2015 அன்று உள்ளக விசாரணையின்போது உறுதி செய்த நடத்துனர் சமை உரிமையாளரிடம் பெற்ற பணத்தைத்தான் தணிக்கையாளர்கள் குற்றம்சாட்டபட்டவரிடம் பறிமுதல் செய்தார்களா என்பதை உறுதி செய்ய மறுத்துவிட்டார். எனவே தணிக்கையாளர்கள் குற்றம்சாட்டபட்டவரிடம் கைப்பற்றிய பணம் சுமை உரிமையாளிரிடம் பெற்றது என்ற தகவலை உறுதி செய்யப்படவில்லை எனவும், ஆள் இல்லாத சுமை பற்றிய தகவல் உண்மை என்பதை குற்றம்சாட்டபட்டவர் அந்த சுமையின் உரிமையாளரை வைத்து உறுதி செய்ய முன்வரவில்லை எனவும், எனவே குற்றம்சாட்டபட்டவரின் விளக்கத்தை ஏற்க இயலாது எனவும், இந்நிலையில் குற்றம்சாட்டப்பட்ட ஓட்டுனர் மீது கழக நிலையாணைப் பிரிவு 14(e)ன் கீழ் சுமத்தப்பட்ட கையூட்டுப் பெறுதல் என்ற குற்றச்சாட்டு நிரூபணமானதாக தெரிவித்துள்ளார்.

12. இந்த வழக்கை பொறுத்தவரை, தணிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் 08.12.2014 ம் தேதிய வாக்குமூலத்தில் செய்த தவறை ஒப்புக் கொண்டுள்ளார். அதன் பின்னிட்டு, பின் யோசனையின்பேரில் அவர் அளித்த வாக்குமூலத்திற்கு மாறாக பதில் அளித்துள்ளதும், உள்ளக விசாரணையில் அவர் வாக்குமூலத்திற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளதும் முற்றிலும் ஏற்புடையதல்ல. 21.07.2015 ம் தேதியிட்ட குறிப்பாணையுடன் உள்ளக விசாரணை அதிகாரியின் இறுதி அறிக்கையின் நகல் இணைத்து 03 தினங்களுக்குள் பதில் அளிக்குமாறு திரு.C.ஆனந்தகுமாருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனை பெற்றுக் கொண்ட

திரு.C.ஆனந்தகுமார் 02.08.2015 ம் தேதியிட்டு அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை. இந்நிலையில் 18.08.2015 ம் தேதியிட்டு வழங்கிய அறிவிப்பு கடிதத்தை பெற்றுக் கொண்ட மனுதாரர் 27.08.2025 ம் தேதியில் பதிலுரை தாக்கல் செய்தார். 29.08.2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி ஏற்கனவே தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 09.12 2014 முதல் 27.12.2014 வரையிலான 19 நாட்களை அவரது விடுப்புக் கணத்தில் நிலுவையில் உள்ள விடுப்பு நாட்களை பொறுத்து விடுப்பாக கருதி அதற்குரிய சம்பளத் தொகையை எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் வழங்கப்பட்டுவிட்டது. ஓட்டுனர் திரு.C.ஆனந்தகுமார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமானதால் 29.08.2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி அவரது வருடாந்திர ஊதிய உயர்வை இரண்டு வருட காலத்திற்கு பின் தொடர்ச்சியுடன் தள்ளிவைத்து உத்தரவிடப்பட்டது. இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற 60 நாட்களுக்குள் மேலாண் இயக்குநர் அவர்களுக்கு மேல்முறையீடு செய்ய ஓர் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

13. மனுதாரர் சங்கம் கூறுவது போல எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு எதிராக சட்டவிதிகளுக்கு புறம்பாகவோ, எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிலையாணைகளுக்கு புறம்பாகவோ வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கத்தோடு செயல்படவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகம் நடத்திய உள்ளகவிசாரணையில் சங்க மனுதாரருக்கு சட்டம் மற்றும் இயற்கை நியதிகளுக்கு உட்பட்டு அனைத்து சந்தர்ப்பங்களும், மனுதாரர் சங்கம் கோரிய ஆவணங்கள் அதற்குரிய கால அவகாசம் முழவதும் வழங்கப்பட்டது. எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

14. <u>எழுவினா</u> :

இரு தரப்பு வாதங்களும் கேட்டு இந்த நீதிமன்றம் கீழ்காணும் எழுவினாக்களை வணைந்தது.

1. எதிர்மனுதாரர் நிர்வாகம் நடத்தியுள்ள உள்ளக விசாரணை சரியாகவும், முறையாகவும் நடந்துள்ளதா?

2. உள்ளக விசாரணை அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதா?

15. <u>சான்றாவணமும், சாட்சியமும்</u> :

இரு தரப்பு ஒப்புதலின் பேரில் தொ.சா.ஆ.1 முதல் தொ.சா.ஆ.3 மற்றும் நி.சா.ஆ.1 முதல் நி.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் முன்னிலை செய்யப்படவில்லை.

16. <u>பிரச்சனைகள் 1 மற்றும் 2</u> :

சங்க உறுப்பினர் திரு.ஆனந்தகுமார் ஓட்டுநர் தரப்பில் 08.12.2014 ம் தேதி மாலை 05.40 மணியளவில் திருப்பூரிலிருந்து கோவைக்கு TN-38-N-2739 என்ற பேருந்தை இயக்கினார் எனவும், அதில் ஆள் இல்லாத லக்கேஜ் பண்டல் ஏற்றப்பட்டது எனவும், சங்க உறுப்பினர் பேருந்தில் லக்கேஜிற்குரிய கட்டணம் வசூலிக்காமல் பேருந்தை இயக்கி இரவு சுமார் 07.35 மணியளவில் பேருந்து கோவை மத்திய பேருந்து நிலையத்தில் வந்து அடைந்ததாகவும், லக்கேஜ் பண்டலுக்கு ரூ.30/- கட்டணமாக சம்பந்தபட்டவரிடம் வசூலிக்கப்பட்டது எனவும், அந்த நபர் சங்க உறுபினரிடம் ரூ.20/- நோட்டுக்கள் 2 கொடுத்ததாகவும், மீதி ரூ.10/- திரும்ப கொடுத்துவிட்டு நின்ற பொழுது எதிர்மனுதாரரின் தணிக்கையாளர் சங்கஉறுப்பினர்/ஓட்டுநரிடமிருந்து ரூ.20/- ஒன்றை வாங்கிக் கொண்டு ABS

தனியார் பேருந்தை சார்ந்த நபரிடம் ரூ.20/- கையூட்டு பெற்றதாகவும், அந்த கையூட்டு தனியார் பேருந்திற்கு சாதகமாக பெறப்பட்டது எனவும், சங்க உறுப்பினர் ஓட்டுநரையும், சம்பவ பேருந்தின் நடத்துனர் பரமேஸ்வரனையும், தணிக்கையாளர்கள் திரு.வெள்ளிங்கிரிஷாம் மற்றும் திரு.ஆறுமுகசாமி ஆகியவர்கள் வற்புறுத்தியும், மிரட்டியும் சங்க உறுப்பினர் ABS பஸ் நிறுவனத்தை சார்ந்தவரிடம் ரூ.20/- கையூட்டு பெற்றதாக குறைபாடுகளின் சுருக்கப்படிவத்தில் கையொப்பம் பெறப்பட்டது எனவும், எதிர்மனுதாரர் சங்க உறுப்பினர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்றும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது. மேலும் உள்ளக விசாரணையின் போது எதிர்மனுதாரர் தரப்பில் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு சம்பவத்தைச் சார்ந்த சாட்சியங்களை முன்னிலை செய்யப்படவில்லை என்றும், ஆனால் உள்ளக விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாகவும், நெறிபிறழ்ந்தும், செயல்பட்டு விசாரணை அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

17. எதிர்மனுதாரர் தரப்பில் சங்க உறுப்பினர் 08.12.2014 அன்று TN38-N-2739 என்ற திருப்பூர்-கோவை வழித்தடத்தில் இயங்கும் பேருந்தின் ஓட்டுநராக பணிபுரிந்தார் எனவும், பிற்பகல் 05.45 மணிக்கு திருப்பூரிலிருந்து புறப்பட்டு, இரவு 07.35 மணிக்கு கோவை மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்தது அடைந்ததாகவும், அது சமயம் ABS தனியார் துறைபேருந்தை சார்ந்த நபரிடம் அவர்களுக்கு சாதகமாக பேருந்தை இயக்குவதற்காக ரூ.20/-ஐ கையூட்டாக பெற்றார் எனவும், அந்த கையூட்டு பெறும்பொழுது திரு.வெள்ளிங்கிரிசாமி மற்றும் ஆறுமுகசாமி

ஆகியோர் தணிக்கையாளர்கள் கையும், களவுமாக ஓட்டுநரை பிடித்துக்கொண்டார்கள் எனவும், ஓட்டுநர் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்து தன்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டார் எனவும், பேருந்தின் நடத்துநரும் ஓட்டுநர் கையூட்டு பெற்றது உண்மையென ஒப்புக்கொண்டு கடிதம் கொடுத்ததாகவும், அதற்கான குற்றச்சாட்டு குறிப்பாணை சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்டது, அவருடைய பதில் திருப்திகரமாக இல்லாதபடியால் உரிய அறிவிப்பு கொடுத்து உள்ளக விசாரணை நடத்தப்பட்டது எனவும், உள்ளக விசாரணையை முறையாகவும், சரியாகவும் நடத்தப்பட்டது என்றும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் சங்க உறுப்பினர் மீது சாட்டப்பட்ட நிலையாணைகள் பிரிவு 14(e)ன்படியான ஒழுங்கீனச் செயல் சங்க உறுப்பினர் மீது நரூபிக்கப்பட்டது என்பதாக முடிவு செய்து விசாரணை அதிகாரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், அந்த அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கது எனும் வாதுரை முன்னிலை செய்யப்பட்டது.

18. சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்ட 12.12.2014 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை நி.சா.ஆ.5 ஆகும். நி.சா.ஆ.5 ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"சுங்கம்-1 கிளையை சேர்ந்த பேருந்து எண்.TN38-N-2739 திருப்பூர் to கோவை வழித்தடத்தில் 08.12.2014 ம் தேதி நீர் ஓட்டுநராக பணிபுரிந்த போது தணிக்கையாளர்கள் கோவை மத்திய பேருந்து நிலையத்தில் இரவு 07.35 மணிக்கு உம்மை கண்காணித்த போது ABS என்ற தனியார் பேருந்தின் ஊழியர் ஒருவரிடம் ரூ.20/- கையூட்டாக பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது எனவும், நீர் பெற்ற

ரூ.20/-ன் எண்.80G875193 ஆகும் என்றும், அதை தணிக்கையாளர்கள் உம்மிடம் இருந்து கைபற்றியுள்ளனர் என்றும், இது குறித்து மேற்கொண்டு ஆய்வு செய்த போது மாலை 5.40 மணிக்கு திருப்பூரில் புறப்பட்டு பல்லடத்திற்கு மாலை 6.05 க்கு வந்து 6.10 க்கு அங்கிருந்து புறப்படவேண்டும் என்றும், தனியார் பேருந்தான ABS பல்லடத்திற்கு மாலை 6.10 க்கு வந்து 6.15 க்கு புறப்படவேண்டும் என்றும் அப்பேருந்திற்கு சாதகமாக செயல்படுவதற்காகவே நீர் ரூ.20/- கையூட்டு பெற்றது தெரிய வந்தது என்றும், இது குறித்து நடத்துநரின் முன்னிலையில் உம்மை விசாரித்த பின் குறைபாடுகளின் சுருக்கம் படிவம் பூர்த்தி செய்து உம்மிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றும் உம்மீது புகார் வந்துள்ளது, மேற்படி உமது செயலானது இந்நிறுவன நிலையாணை பிரிவு எண்.14(e)க்குடிபட்ட ஒழுங்கீனமாகும்".

நி.சா.ஆ.5 குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்ட சங்க உறுப்பினர் நி.சா.ஆ.6 விளக்கத்தை எதிர்மனுதாரருக்கு சமர்பித்துள்ளார். இந்த விளக்கத்தை எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்ளாமல் உள்ளக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பின்னர் அந்த தகவல் சங்க உறுப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி குற்றச்சாட்டு பற்றி விளக்கி சங்க உறுப்பினரிடம் வினவியுள்ளார். சங்க உறுப்பினர் குற்றச்சாட்டை மறுத்துள்ளது நி.சா.ஆ.8 ஐ பார்வையிடுகையில் இருந்து தெரிய வருகிறது. பின்னர் நிர்வாகத் தரப்பு சாட்சி விசாரணை தொடங்கப்பட்டு தணிக்கையாளர் பிரிவு திரு.வெள்ளிங்கிரிசாமி நி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு நி.சா.ஆ.1 முதல் நி.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டுள்ளது. நி.சா.ஆ.8 உள்ளக விசாரணை அறிக்கையுடன் இணைந்த நடவடிக்கை குறிப்புகளை பரிசீலனை செய்கையில் சங்க உறுப்பினர்

தரப்பில் நி.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும் நிர்வாகத் தரப்பில் சம்பவ பேருந்தின் நடத்துனர் திரு.பரமேஸ்வரன் நி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நி.சா.2 ஐ சங்க உறுப்பினர் குறுக்கு விசாரணை செய்த பின்னர் சங்க உறுப்பினரின் சாட்சியத்திற்கு உள்ளக விசாரணை மாற்றிவைக்கப்பட்டுள்ளது. சங்கஉறுப்பினர் தரப்பில் 17.12.2014 ல் அனுப்பிய விளக்கக் கடிதத்தையும், 13.06.2015 ல் கூடுதல் விளக்கக் கடிதத்தையும் தனது தரப்பில் குறியிட்டு தனது தரப்பு சாட்சியத்தை முடித்துக் கொண்டதாக தெரியவருகிறது. மேலும் விசாரணையில் நிர்வாகம் தனக்கு வழங்கிய அவகாசம் போதுமானது என்பதாக ஒப்புக் கொண்டு சங்க உறுப்பினர் கையொப்பம் செய்துள்ளார். உள்ளக விசாரணை நடவடிக்கைகளும், உள்ள விசாரணை அதிகாரியின் அறிக்கையும், ஒரு தலைபட்சமானது மற்றும் நெறிபிறழ்ந்தது என்று கூறும் சங்க உறுப்பினர் அதற்கான எந்த சாட்சியமும் முன்னிலை செய்யவில்லை. மாறாக உரிய அவகாசம் தனக்கு எதிர்மனுதாரர் வழங்கியதாக ஒப்புக் கொண்டு கையொப்பம் செய்துள்ளார். மேலும் நி.சா.ஆ.8 விசாரணை அறிக்கை மற்றும் விசாரணை நடவடிக்கை குறிப்புகளை பரிசீலனை செய்கையில் உள்ளக விசாரணை நடத்திய முறையில் எந்த குறைபாடுகளும் காண்பதற்கில்லை என்பதாக முடிவு செய்கிறேன்.

19. விசாரணை அதிகாரி சங்க உறுப்பினர் மீது நிலையாணைகள் பிரிவு 14(e)ன்படியான ஒழுங்கீனச்செயல் செய்துள்ளதாக நி.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளார். சங்க உறுப்பினர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு என்னவென்றால், 08.12.2014 ம் தேதி இரவு7.35 மணியளவில் கோவை மத்திய பேருந்து

நிலையத்தில் தனியார் துறை ABS பேருந்தை சார்ந்த நபருடன் அவர்களுக்கு சாதகமாக செயல்படுவதற்கு ரூ.20/- கையூட்டு பெறும்பொழுது தணிக்கையாளர்களால் கையும், களவுமாக சங்க உறுப்பினர் பிடிக்கப்பட்டார் என்பதாகும். சங்க உறுப்பினர் தரப்பில் எதிர்மனுதாரர் கூற்றை மறுத்து சம்பவ இடத்தில் ஆள் இல்லாத லக்கேஜ் பண்டலுக்கு சம்பந்தப்பட்ட சுமைக்கட்டணம் ரூ.30/-ஐ வசூலித்ததாகவும், ரூ.30 /-வசூலிக்கும் பொழுது சம்பந்தப்பட்ட நபர் இரண்டு ரூ.20/- நோட்டுக்களை கொடுத்ததாகவும், ரூ.10/- திரும்ப கொடுத்தாகவும் அப்பொழுது அங்கிருந்த தணிக்கையாளர்கள் சங்க உறுப்பினரிடம் ரூ.20/-ஐ பெற்று தனியார் பேருந்திற்கு சாதகமாக செயல்படுவதற்கு கையூட்டு பெற்றதாக வற்புறத்தி சங்க உறுப்பினரிடமும், நடத்துனரிடம் கடிதங்கள் பெற்றார் என்பதாகும். திருப்பூரில் ஆள்இல்லாத லக்கேஜ் பண்டலை அனுப்பியதற்கு லக்கேஜ் பண்டல் அனுப்பிய நபரையோ? அல்லது தனக்கு லக்கேஜ் பண்டலுக்கு ரூபாய் கொடுத்த நபரையோ? சங்க உறுப்பினர் தனது தரப்பில் விசாரித்து தான் குற்றவாளி இல்லை என்பதை நிரூபிக்க முன்வரவில்லை. நி.சா.ஆ.3 சங்க உறுப்பினரின் வாக்குமூலத்தை பார்வையிடுகையில் தான் தனியார் துறை நிறுவனத்திடமிருந்து ரூ.20/- (நி.சா.ஆ.3) கையூட்டுப்பெற்றதாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளது தெரியவருகிறது. மேலும் தனது குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டுள்ளார். நி.சா.ஆ.4 ஐ பார்வையிடுகையில் பேருந்தின் நடத்துநரும், சங்கஉறுப்பினர் கையூட்டு பெற்றதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளது தெரியவருகிறது. சங்க உறுப்பினர் தரப்பில் நி.சா.ஆ.3 ம், நி.சா.ஆ.4 வாக்குமூலங்கள் சங்க உறுப்பினரை மிரட்டி பெற்றப்பட்டது என்பதாகும். தணிக்கையாளர் திரு.வெள்ளிங்கிரியும், நடத்துநர்

திரு.பரமேஸ்வரனையும், நி.சா.1 மற்றும் நி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். நி.சா.1 மற்றும் நி.சா.2 யும் சங்க உறுப்பினரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். சங்க உறுப்பினர் மற்றும் நடத்துநரிடமிருந்து சம்பவ இடத்தில் பெறப்பட்ட 08.12.2014 நாளிட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் உள்ளக விசாரணையின் போது நி.சா.1 ன் வாயிலாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையின் போது நி.சா.1 டம் சங்க உறுப்பினர் மற்றும் நடத்துநரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் நி.சா.ஆ.3, நி..சா.ஆ.4 ஐ பொறுத்து எந்த வினாக்களும் எழுப்பப்படவில்லை. வாக்குமூலங்கள் மிரட்டி வாங்கப்பட்டது என்பதாக கூறும் சங்க உறுப்பினர் அதை நிர்வாகத் தரப்பு சாட்சிகளிடம் கேள்விகளாக எழுப்பப்படவில்லை. எனவே நி.சா.ஆ.3 ம் நி.சா.ஆ.4 ம் நி.சா.1 ஆல் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதாகும். அவ்வாறான நிலையில் நி.சா.ஆ.3, நி.சா.ஆ.4 ஒப்புதல் வாக்குமூலங்கள் மிரட்டி வாங்கப்பட்டது என்பது சங்க உறுப்பினர் நிரூபிக்க தவறிவிட்டார் என்பதாக முடிவு செய்கிறேன். உள்ளக விசாரணையில் நி.சா.2 ஆக பேருந்து நடத்துநர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரை குறுக்கு விசாரணை செய்தபோது சங்க உறுப்பினர் கையில் அந்த இரண்டு ரூ.20/- நோட்டுக்களில் ஒன்றை தான் கையூட்டு பெற்றதாக எழுதி வாங்கினார்கள் என்பதாக வினா எழுப்பியதற்கு நடத்துநர் தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். உண்மையிலேயே லக்கேஜ் சம்பந்தமாக இரண்டு ரூ.20/- நோட்டுக்கள் சங்க உறுப்பினர் பெற்றிருந்தால் அதை ஏற்றுக் கொண்டு நடத்துநர் பதில் அளித்திருப்பார். ஆனால் சங்க உறுப்பினருடன் இருந்த நடத்துநர் சங்க உறுப்பினரை சார்ந்து அவரது வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எனவே, மேலே குறிப்பிட்டுள்ள விவாத முடிவுகளை கருத்தில்

கொண்டு உள்ளக விசாரணை அதிகாரி சங்க உறுப்பினர் மீது சாட்டப்பட்ட 14(e)ன்படியான ஒழுங்கீன செயல்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்க முடிவுதான் என்பதாக முடிவு செய்கிறேன்.

இறுதியாக, உள்ளக விசாரணை அதிகாரியின் முடிவும், அறிக்கையும் சரியானதும், முறையானதும், சட்டப்படியும், செல்லத்தக்கது என்பதாக முடிவு செய்து பிரச்சனைகள் 1 மற்றும் 2 ற்கு இவ்வாறாக விடையளிக்கிறேன்.

மேல் நடவடிக்கைக்காக 30.04.2026.

(இந்த தீர்வம் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 24 ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.)

LATHA A P
Digitally signed by LATHA A P
Date: 2026.04.24 12:38:48 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : - இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : - இல்லை -

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| தொ.சா.ஆ.1 | --- | பயணச்சீட்டு. | நகல் |
| தொ.சா.ஆ.2 | 19.06.2015 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய கடிதம். | நகல் |
| தொ.சா.ஆ.3 | 16.10.2015 | சங்க உறுப்பினர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் மேலாண்மை இயக்குநருக்கு அனுப்பிய மேல்முறையீடு செய்த கடிதம். | நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| ஆவண எண் | தேதி | விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| நி.சா.ஆ.1 | 08.12.2014 | ரூ.20 நோட்டு எண்.875193ன் நகல் மற்றும் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | குறைபாடுகளின் சுருக்கம். | |
| நி.சா.ஆ.2 | 09.12.2014 | தணிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட புகார். | நகல் |
| நி.சா.ஆ.3 | 08.12.2014 | ஓட்டுநரின் ஒப்புதல் வாக்குமூலம். | நகல் |
| நி.சா.ஆ.4 | 08.12.2014 | நடத்துநரின் ஒப்புதல் வாக்குமூலம். | நகல் |
| நி.சா.ஆ.5 | 12.12.2014 | குற்றச்சாட்டு குறிப்பாணை. | நகல் |
| நி.சா.ஆ.6 | 17.12.2014 | குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு அளித்த விளக்கக் கடிதம். | நகல் |
| நி.சா.ஆ.7 | 28.12.2014 | இடைக்கால உத்தரவு. | நகல் |
| நி.சா.ஆ.8 | 17.07.2015 | விசாரணை அதிகாரியின் அறிக்கை மற்றும் விசாரணை நடவடிக்கை குறிப்பு. | நகல் |
| நி.சா.ஆ.9 | 21.07.2015 | குறிப்பாணை. | நகல் |
| நி.சா.ஆ.10 | 02.08.2015 | குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு சங்க உறுப்பினர் அளித்த ஆட்சேபணைக் கடிதம். | நகல் |
| நி.சா.ஆ.11 | 18.08.2015 | அறிவிப்பு. | நகல் |
| நி.சா.ஆ.12 | 27.08.2015 | அறிவிப்பு கடிதத்திற்கு சங்க உறுப்பினர் அளித்த சமாதானக் கடிதம். | நகல் |
| நி.சா.ஆ.13 | 29.08.2015 | உத்தரவு. | நகல் |

LATHA A P Digitally signed by LATHA A P Date: 2026.04.24 12:38:58 +0530

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

Copy of Preliminary Award of
Fair/Draft Order in
ID No.59/2025,
Date :24.04.2026,
PLC, CBE.